# நிகழ்வுகள்



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

அ

www.WorldTamilAcademy.com

அறிவே வளம்

# உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

# காலைப்பொழுது.



காலையில் எழுகின்றான்.



பல் துலக்குகிறான்.



உணவு உண்ணுகிறான்.



பள்ளிக்குச் செல்கிறான்.

# மளிகைப் பொருள்கள் வாங்குதல்.




பல்பொருள் அங்காடிக்குச் செல்கிறார்.



பொருள்களைத் தேர்வு செய்கிறார்.



பணம் செலுத்துகிறார்.



பொருள்களை வீட்டிற்கு எடுத்து வருகிறார்.

# உணவு சமைத்தல்.





ஓடும் நீரில் காய்கறிகளைக் கழுவுகிறாள்.

காய்கறிகளை நறுக்குகிறாள்.





உணவு சமைக்கிறாள்.

உணவு சாப்பிடுகிறாள்.

# சுத்தம் செய்தல்.





பொருள்களை எடுக்கிறாள்.

அறையைச் சுத்தம் செய்கிறாள்.





அலமாரியில் பொருள்களை அடுக்கி வைக்கிறாள்.

சுத்தம் செய்த அறையில் மகிழ்ச்சியாக இருக்கிறாள்.

# துணி துவைத்தல்.





துவைப்பதற்கானத் துணிகளை எடுக்கிறாள்.

துணிகளைச் சலவை இயந்திரத்தில் போடுகிறாள்.





துணிகளைக் கொடியில் உலர வைக்கிறாள்.

உலர்ந்த துணிகளை மடிக்கிறாள்.

# உடைந்ததைச் சரிசெய்தல்.





பொம்மை உடைந்திருக்கிறது.

சக்கரத்தைச் சரி செய்ய முயற்சிக்கிறான்.





அப்பா உதவி செய்கிறார்.

இருவரும் மகிழ்ச்சியுடன் விளையாடுகிறார்கள்.

# செடி வளர்த்தல்.



செடியை நடுகின்றான்.



செடிக்குத் தண்ணீர் ஊற்றுகிறான்.



செடியைச் சுற்றியுள்ள மண்ணைச் சரி செய்கிறான்.



செடியில் பூத்திருக்கும் பூக்களை மகிழ்ச்சியுடன் பார்க்கிறான்.

# மருத்துவமனைக்குச் செல்லுதல்.



ராமு மருத்துவமனைக்கு அம்மாவுடன் செல்கிறான்.



மருத்துவர் ராமுவிடம் உடல்நிலை பற்றி விசாரிக்கிறார்.



மருத்துவர் உடல்நிலையைப் பரிசோதிக்கிறார்.



ராமுவுக்கு மருந்து கொடுக்கிறார்.

# பிறந்தநாள் விழா.





பலூன்களால் அறையை அலங்கரிக்கின்றான்.

நண்பர்களை வரவேற்கின்றான்.





கேக்கில் உள்ள மெழுகுச்சுடரை அணைக்கின்றான்.

நண்பர்கள் கொடுத்த பரிசை மகிழ்ச்சியுடன் திறக்கிறான்.

# புதிய நண்பன்.




சிறுமி புதருக்கு அருகில் "மியாவ்" என்ற சத்தத்தைக் கேட்கிறாள்.



அவள் ஒரு சிறிய, பயந்த பூனைக் குட்டியைக் கண்டுபிடிக்கிறாள்.



உணவளித்து, ஒரு படுக்கையையும் அமைத்துக் கொடுக்கிறாள்.



பூனைக்குட்டியும் சிறுமியும் நல்ல நண்பர்களாயினர்.

# கடற்கரைக்குச் செல்லுதல்.



கடற்கரைக்குச் செல்லத் திட்டமிடுகிறார்கள்.



கடற்கரைக்கு மகிழுந்தில் செல்கிறார்கள்.



கடற்கரையில் விளையாடுகின்றனர்.



சூரியன் மறையும் காட்சியைப் பார்த்து மகிழ்கிறார்கள்.

# மாமா அனுப்பிய இனிப்பு.





அழைப்பு மணி ஒலிக்கக் கேட்கிறான்.

பெட்டியை வாங்குகிறான்.





ஆவலுடன் திறந்து பார்க்கிறான்.

மாமாவை எண்ணிக்கொண்டு இனிப்பை உண்டு மகிழ்கின்றான்.

# மிதிவண்டி ஓட்டுதல்.





தலையில் தலைக்கவசம் அணிந்து கொள்கின்றான்.

காற்று அடிக்கிறான்.





வழியில் நண்பர்களைச் சந்திக்கிறான்.

நண்பர்களுடன் மகிழ்ச்சியாக மிதிவண்டி ஓட்டுகிறான்.

# படம் வரைதல்.



வரைவதற்குத் தேவையான தாள், கலர் பென்சில்கள் எடுக்கிறாள்.



வடிவங்களை வரைகிறாள்.



வரைந்த வடிவங்களுக்கு வண்ணமிடுகிறாள்.




படத்தின் கீழே கையெழுத்திட்டுக் காண்பிக்கிறாள்.

# பழச்சாறு தயாரித்தல்.





பழங்களை நீரில் கழுவுகிறாள்.

பழங்களை வெட்டுகிறாள்.





வெட்டிய பழங்களை மின்அம்மியில் அரைக்கிறாள்.

பழச்சாறை வடிகட்டி ரசித்துக் குடிக்கிறாள்.




உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com